ஐக்கிய ஜெபம்

**திருச்சபைகளுக்கு அறிவிப்பு**

**30 ஜுலை 2012**

அன்புக்குரிய சபைத் தலைவர்கள், போதகர்கள் மற்றும் நண்பர்களுக்கு,

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மலேசியாவிலுள்ள புராட்டஸ்டென்ட் திருச்சபைகளைச் சேர்ந்த 19 திருச்சபைகளும், ஜெபத் தலைவர்களும் கடந்த 5 ஜுலை 2012 அன்று பெட்டாலிங் ஜெயாவிலுள்ள மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை அலுவலகத்தில் ஒன்றுகூடினது ஒரு வரலாற்று நிகழ்வாக அமைந்தது என்பதை மகிழ்ச்சியுடனும், வணக்கத்துடனும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்கள் தேசிய சுவிசேஷ கிறிஸ்தவ ஐக்கியம் (NECF) மற்றும் மலேசிய திருச்சபைகள் சங்கம்(CCM) உட்பட பிற கிறிஸ்தவ அமைப்புகளிலிருந்தும், பிராந்தியங்களிலுள்ள போதகர்கள்/ஊழியர்கள் ஐக்கியங்களைச் சேர்ந்தவர்களும், முக்கிய ஜெப இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்தனர். குறுகிய கால அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், தேசத்திற்காகவும், திருச்சபைகளுக்காகவும் ஒருங்கிணைந்து ஜெபிக்க வேண்டும் என்ற ஆண்டவருடைய அழைப்பை உணர்ந்தவர்களாய் மனதிலும், சிந்தையிலும் ஆயத்தமாக வந்திருந்தனர்.

கலந்துரையாடலின் போது, பங்கேற்பாளர்கள் தங்களது கரிசனைகளைப் பகிர்ந்து கொண்டனர். தேசமானது பல குழப்பங்களையும், பிரச்சனைகளையும் சந்தித்து வருவதால், மலேசிய திருச்சபைகள் ஒன்றுகூடி ஜெபிக்க வேண்டியது அவசியம் என்பது அனைவரின் பொதுவான உடன்பாடான கருத்தாக இருந்தது. தேசத்தின் மாற்றத்திற்கு திருச்சபை முக்கிய பங்கு வகிக்க வேண்டுமெனில், பரிசுத்த மக்களாக ஜீவிக்க அழைக்கப்பட்ட நாம் அழைப்பினை வைராக்கியமாகக் கொண்டு, உண்மையோடு ஒற்றுமையாக வாழ முயற்சி செய்வோம். மற்றும் தேசத்திற்காக மனங்கசிந்து ஜெபிப்போம்.

கூட்டத்தில் ஒற்றுமை மற்றும் நம்பிக்கை உணர்வு மேலோங்கி காணப்பட்டது. அதே போல் எல்லா திருச்சபைகளும் ஒருங்கிணைந்து நமது தேசத்தின் ஷேமத்திற்காக தேவனை நாடுதல் என்ற முயற்சி அனைவரது பொதுவான வாஞ்சையாக இருப்பதால் ஒவ்வொருவர் மனதிலும் சந்தோஷத்தைக் கொடுத்தது. ஒருவருக்கொருவர் இப்படிப்பட்டதான ஒற்றுமையும், அன்பும் காணப்படுமாகில் (எபேசியர் 4:1-6) கிறிஸ்து உண்மையாகவே மகிமைப்படுவார் என விசுவாசிக்கிறேன். தேவன் முதலாவதாக ஒற்றுமையின் ஆவியை நமக்குத் தந்தருளினதால் அவருக்கு துதியும், ஸ்தோத்திரத்தையும் செலுத்துவோம்.

ஆகவே, நமது தேசத்திலுள்ள அனைத்துத் திருச்சபைகளும், கிறிஸ்தவர்களும் எங்களோடுகூட இணைந்து தேசத்திற்காக ஜெபிக்கும் இந்த பொதுவான ஜெபக் கூடுகையில் பங்குபெற அன்போடு அழைக்கின்றோம். 2நாளாகமம் 7:13-14 வசனத்தின்படி தேவனுடைய வாக்குத்தத்ததிற்கு கீழ்படிந்து இதனைச் செய்வோமாக.

*"நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன்."*

இந்த ஐக்கிய ஜெபக் கூடுகை ஐக்கிய ஜெபம் என்றழைக்கப்படும். விளக்கக் குறிப்புகள்

தரிசனம்

- மலேசியாவிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும், திருச்சபைகளும், ஜெப இயக்கங்களும் தேசத்திற்காகவும், திருச்சபைக்காகவும் ஜெபிக்க ஒன்றுகூடி வருதல்.

நோக்கம்

- முழுத் திருச்சபையையும் ஜெபத்திலே ஒருங்கிணைக்க வேண்டுமென்பதும், கிறிஸ்தவர்கள் மத்தியிலே ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டுமென்பதுமே இந்த ஐக்கிய ஜெப இயக்கம் அமைப்பதின் பிரதான நோக்கமாகும்.

- சமூகம் மற்றும் தேசிய மாற்றத்திற்காக முழு சபையும் ஒன்றுகூடி ஜெபிக்க சவால் அளிப்பது இரண்டாவது நோக்கமாகும். குறிப்பாக, நமது கவனமானது, 16 செப்டம்பர் தொடங்கி நடைபெறவிருக்கும் முக்கிய நிகழ்வுகளான யூபிலி விழா கொண்டாட்டம் மற்றும் 13ஆவது பொதுத் தேர்தலுமாகும்.

குறிக்கோள்கள்

கீழே காண்பவை ஐக்கிய ஜெபத்தின் குறிக்கோள்களாகும்.

- ஜெபத்திற்கான முக்கிய பிரச்சனைகளை அடையாளம் காணவும், இப்பிரச்சனைகளைக் குறித்து விரைவாகவும், தெளிவாகவும் எல்லா ஜெப இயக்கங்கள், மற்றும் திருச்சபைகளுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளுவதுமாகும்.

- தேசிய சுவிசேஷ கிறிஸ்தவ ஐக்கியம் (NECF) மற்றும் மலேசிய திருச்சபைகள் சங்கம்(CCM) உட்பட ஜெபத்திலே ஈடுபடும் அனைத்துத் திருச்சபைகளுக்கும் ஒரு பாலமாக பணியாற்றவும், அனைவரது முயற்சிகளையும் ஒருங்கிணைத்து, நமது ஜெபமானது ஒருமனதாக, ஓரே நோக்கத்திற்காக ஏறெடுக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவது இதன் குறிக்கோளாகும்.
- நமது தேசம் உருவாகி ஐம்பது வருஷமாகி இருப்பதால் இந்த யூபிலி வருஷத்தில் விசேஷ ஆசீர்வாதத்தை தேவன் தந்தருளும்படி திருச்சபைகளை ஜெபிக்கும்படி சவாலளிக்க வேண்டும். அதனாலே வரும் காலங்களில் நமது தேசத்தில் சமாதானத்தையும், செழுமையையும், சுதந்திரத்தையும், நேர்மையையும் கொண்டுவரும்.
- வரும் 13ஆவது பொதுத் தேர்தலானது அமைதியாகவும், நேர்மையோடும் நடைபெற, திருச்சபைகளை ஜெபிக்கும்படி ஊக்குவிக்க வேண்டும். தேர்த்தெடுக்கப்படும் ஆண் மற்றும் பெண் தலைவர்கள் நேர்மையானவர்களாகவும், திறமையானவர்களாகவும் இருப்பதோடு, தேசத்தின் நீண்ட கால முன்னேற்றத்திற்கென உண்மையான வாஞ்சை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

முன்நோக்கிய பாதை

1. கடந்த ஜூலை 5, 2012 அன்று கலந்து கொண்ட முக்கிய ஜெப இயக்கங்களைச் சேர்ந்தவர்களை பிரநிதிகளாகக் கொண்டு இடைக்கால குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஜெப ஐக்கியத்தின் பணிகள் கண்காணிக்கப்படும். மேலும் யூபிலி கொண்டாட்டம் மற்றும் 13ஆவது பொதுத் தேர்தல் வரை இக்குழு தனது பணிகளைச் செய்து வரும். அதன்பின்பு இக்குழு மறுபரிசீலனைச் செய்யப்படும்.

2. தேசிய சுவிசேஷ கிறிஸ்தவ ஐக்கியம் (NECF) மற்றும் மலேசிய திருச்சபைகள் சங்கத்தின்(CCM) ஜெப ஊழியத்தினைச் செய்துவரும் குமாரி. கிறிஸ்யேன் சின் மற்றும் அருட்திரு. ஆண்டி சி ஆகிய இருவரும் இணை-செயலாளர்களாக ஒருங்கிணைந்து ஜெப ஐக்கியத்தின் தகவல் தொடர்பு பணிகளைச் செய்வார்கள்.

3. வெளியிடப்படும் தகவல்கள் அனைத்துத் திருச்சபைகளுக்கும் கிடைக்கும்படி மலாய், ஆங்கிலம், சீன மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும்.

அனைவரும் எங்களோடுகூட இந்த ஆவிக்குரிய ஜெபத்திட்டத்திலே ஒருசேர வேண்டுமென உங்களை நோக்கிப் பார்க்கிறோம். அப்போது தான் ஆண்டவருடைய ஆசீர்வாதம் நமது தேசத்தின் மேல் ஊற்றப்பட்டு, எல்லா குடிமக்களுக்கும் நன்மை பயக்கும் ஒரு வல்லமையான மாற்றத்ததை நாம் காணலாம். உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல் பூமியிலும் செய்யப்படுவதாக என நாம் ஜெபிப்பது போல், நமது ஜெபமும், ஜீவியமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதாக மட்டுமே இருப்பதாக. இந்த மலேசியா தேசத்திலே நமது நாட்களில், தேவன் தமது மகிமையை வெளிப்படுத்தும்படி ஒருங்கிணைந்து உண்மையோடு தேவனைத் தேடுவோமாக. தேவன் தமது திருச்சபை மற்றும் நமது சந்ததியின் பேரிலே வைத்துள்ள சித்தத்தை நாம் நிறைவேற்ற தேவன்தாமே கிருபை புரிய ஜெபிப்போமாக. அவரது நாமத்திற்கே துதியும், கனமும் சதா காலமும் உண்டாவதாக.

கிறிஸ்துவின் ஆசீர்வாதம்,

இடைக்கால குழு, ஜெப ஐக்கியம்,

1. பேராயர் ஹுவா யூங், (தலைவர்-மெதடிஸ்ட்)
2. அருட்திரு. ஆண்டி சி, (இணை-செயலாளர் தேசிய சுவிசேஷ கிறிஸ்தவ ஐக்கியம் (NECF)
3. குமாரி. கிறிஸ்யேன் சின் (இணை-செயலாளா மலேசிய திருச்சபைகள் சங்கத்தின்(CC)
4. போதகர். ஸ்டீவன் சூன் (கோத்த கின்னபாலு- போதகர் ஐக்கியம்)
5. அருட்திரு. ஆன் லோவ் (மலேசிய ஜெப இயக்கம்- MNPN)
6. அருட்திரு.தியோ கிவி கெங் (அசெம்பளி ஆப் காட்)
7. டாக்டர் வாங் டிக் வா (மெதடிஸ்ட்)
8. நெல்சன் கீ (சரவாக் போதகர்கள் ஐக்கியம்)
9. போதர் இங் டெங் குவாட் (தற்காலிக பிரநிதித்துவம், பினாங்கு போதகர்கள் ஐக்கியம்)

தொடர்பு:

குமாரி. கிறிஸ்யேன் சின்
கை தொலைபேசி: +6012 2376102
மின்னஞ்சல்: chrisanne.chin@gmail.com

அருட்திரு. ஆண்டி சி,
கை தொலைபேசி: +6016 2030561
மின்னஞ்சல்: chrisanne.chin@gmail.com